**செ.வெ.எண்:39** **நாள்:22.03.2018**

# பத்திரிக்கைசெய்தி

## அரசு ஊழியர்களுக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகள்

2017-2018 ஆம் ஆண்டிற்கு அரியலூர் மாவட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அரியலூர் மாவட்ட விளையாட்டுப் பிரிவின் சார்பாக, **27.3.2018 அன்று காலை 9.00 மணி முதல் அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில்** நடத்தப்பட உள்ளது. தடகளம் மற்றும் குழு விளையாட்டுகளிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக போட்டிகள் நடத்தப்பட உள்ளது. தடகளம் விளையாட்டில் ஆண்களுக்கு 100மீ, 200மீ, 800மீ, 1500மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், 4 x 100 மீ தொடர் ஓட்டம் ஆகிய பிரிவுகளிலும், பெண்களுக்கு 100மீ, 200மீ, 400மீ, 800மீ, நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், 4 x 100 மீ தொடர் ஓட்டம் ஆகிய பிரிவுகளிலும் மற்றும் இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து(ஆண்களுக்கு மட்டும்), டென்னிஸ், கபாடி, மேசைபந்து, கையுந்துபந்து ஆகிய குழு விளையாட்டுகளிலும் போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரசுத்துறை அலுவலகங்களில் பணியுரியும் மாநில அரசு ஊழியர்கள் கலந்துகொள்ளலாம். காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறையில் பணிபுரிபவர்கள் கலந்துகொள்ள இயலாது. காவல் பணியில் புதியதாக சேர்ந்து ஆறு மாதகாலத்திற்குட்டவர்கள் கலந்துகொள்ள இயலாது. காவல்துறையில் அமைச்சுப்பணியாளர்கள் கலந்துகொள்ளலாம். அரசுப்பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்கள் கலந்துகொள்ளலாம்.

ஒப்பந்த பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயத்திற்குட்பட்ட தினக்கூலி பணியாளர்கள் கலந்துகொள்ள இயலாது. சீருடைப்பணியாளர்கள் பங்குபெற அனுமதி இல்லை. தற்காலிக / தினக்கூலி பணியாளர்கள் இப்போட்டிகளில் பங்குபெற அனுமதி இல்லை. தொழில்முறை விளையாட்டு வீரர்கள் ஒப்பந்த பணியாளர்கள் இப்போட்டியில் பங்குபெற அனுமதி இல்லை.

மாவட்ட மற்றும் மாநில அளவிலான அரசு ஊழியர்களுக்கான விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்பவர்களுக்கு சிறப்பு தற்செயல் விடுப்பு அந்தந்த துறை மூலம் வழங்க அரசாணையில் (G.O.MS.No.93, Dated.27.11.2013) தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவில் வெற்றிப்பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் மாவட்ட அளவில் வெற்றிப்பெற்று மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொள்ளும் அரசு ஊழியர்களுக்கு சீருடைகள் வழங்கப்படும்.

தனிநபர் மற்றும் குழுப்போட்டிகளில் முதல் இடம் பெறுபவர்கள் மட்டும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொள்வர். போட்டிகளில் கலந்துகொள்ளும் அரசு ஊழியர்களுக்கு தினப்படி மற்றும் பயணப்படி அந்தந்த அலுவலகத்தின் பொறுப்பாகும்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரசு துறை அலுவலகங்களில் பணிபுரியும் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்பும் அரசு ஊழியர்கள் தங்கள் துறை அலுவலகத் தலைவர் அவர்களிடம் உரிய அனுமதியுடன் கடிதம் பெற்று, போட்டிகள் நடைபெறும் நாள் **27.3.2018** அன்று காலை 9.00 மணிக்கு அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் போட்டிகள் தொடர்பான விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரிடையாகவோ அல்லது ஹாக்கி பயிற்றுநர் அவர்களை 9443561313 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**